### சோழவந்தானில்

# திமுக சார்பில் நீர்மோர் பந்தல்

## எம்எல்ஏ திறந்து வைத்தார்

**சோழவந்தான், ஏப். 12:** சோழவந்தான் பேரூர் திமுக சார்பில், ஜெனகை மாரியம்மன் கோயில் அருகே நீர்மோர் பந்தல் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதற்கு பேரூர் செயலாளர் சத்தியபிரகாஷ் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் பசும்பொன் மாறன், பேரூராட்சி தலைவர் ஜெயராமன், பொதுக்குழு ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். எம்எல்ஏ வெங்கடேசன் நீர் மோர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு நீர்மோர், சர்பத், தர்ப்பூசணி உள்ளிட்டவற்றை வழங்கினார்.



சோழவந்தானில் ஜெனகை மாரியம்மன் கோயில் அருகே, நீர்மோர் பந்தலை எம்எல்ஏ வெங்கடேசன் துவக்கி வைத்தார்.

இதில் அவைத் தலைவர் தீர்த்தம், பொருளாளர் கண்ணன், துணை செயலாளர் ஸ்டாலின், மீனவரணி முனியாண்டி, இளைஞர் அணி வெற்றிச்செல்வன், காளிதாஸ், ஒன்றிய நிர்வாகிகள் ராஜா என்ற பெரியகருப்பன், கேபிள் ராஜா, மாவட்ட பிரதிநிதி சுரேஷ், மகளிரணி சசிகலா சக்கரவர்த்தி, பேரூராட்சி கவுன்சிலர்கள் குருசாமி, நிஷா கௌதமராஜா, சிவா, முத்துச்செல்வி சதீஷ், தகவல் தொழில்நுட்ப அணி முத்துப்பாண்டி, சிவா மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பொதுமக்களின் தாகம் தீர்க்க கோடைகாலம் முடியும் வரை இந்த நீர்மோர் பந்தல் செயல்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

### சித்திரை திருவிழாவை முன்னிட்டு

# இந்த மாத இறுதியில் அரசு பொருட்காட்சி தொடக்கம்

## மதுரை தமுக்கம் மைதானத்தில் ஜூன் வரை நடக்கிறது

**மதுரை, ஏப். 12:** மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நடைபெறும் சித்திரை திருவிழாவை முன்னிட்டு, அரசின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் பொருட்காட்சி பெரும் வரவேற்பை பெற்றதாக உள்ளது. இந்த ஆண்டிற்கான பொருட்காட்சி நடத்துவது தொடர்பான அலோசனை கூட்டம் கலெக்டர் சங்கீதா தலைமையில் நேற்று நடந்தது. இதில் பொருட்காட்சி துவக்கம், முன்னேற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் கலெக்டர் சங்கீதா பேசியதாவது: திருவிழா நகரான மதுரையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக ஆண்டு தோறும் அரசுப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டிற்கான பொருட்காட்சி மதுரை தமுக்கம் மைதானத்தில் இந்த மாத இறுதியில் இருந்து ஜூன் மாதம் வரை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன். பொருட்காட்சியை தொடங்கி வைக்கிறார். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். விழாவில், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், மேயர் இந்திராணி பொன்வசந்த் உள்ளிட்ட பலரும் பங்கேற்கின்றனர்.

இப்பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, சுற்றுலாத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வனத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை அரங்குகளும், அரசு சார்பு நிறுவனங்களான ஆவின், மதுரை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றின் அரங்குகளும் அமைக்கப்பட்டு அரசு திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்கப்படும்.

தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகள், செயல்பாடுகளை, அனைத்துத்தரப்பு மக்களும் அறிந்து கொள்வதோடு, பொழுது போக்கு அம்சங்களையும் கண்டுகளித்து, புத்துணர்வு பெறுவதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன. இவ்வாறு கூறினார். இந்த கூட்டத்தில் போலீஸ் கமிஷனர் லோகநாதன், எஸ்பி அரவிந்த், மாநகராட்சி கமிஷனர் சித்ரா விஜயன், வருவாய் கோட்டாட்சியர் ஷாலினி உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாளுடன் சுற்றிய வாலிபர் கைது

**மதுரை, ஏப்.12:** மதுரை, ஜெய்ஹிந்த்புரம் எஸ்ஐ சேதுராமன் தலைமையில் ஏட்டுக்கள் அருள்முருகன், கண்ணன் மற்றும் போலீசார் நேதாஜி ரோடு பகுதியில் ரோந்து சுற்றி வந்தனர். அப்போது போலீசாரை பார்த்ததும் ஒருவர் தப்பி ஓட முயன்றார். அவரை சுற்றி வளைத்து பிடித்து நடத்திய விசாரணையில் அதே பகுதியை சேர்ந்த செந்தில்குமார் மகன் சுந்தரேஸ்வரன் (19) என்பது தெரிந்தது. அவரிடம் இருந்து பெரிய வாளினை பறிமுதல் செய்த போலீசார், வழக்கு பதிந்து அவரை கைது செய்தனர்.

# முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

## மே 3ம் தேதி கடைசி நாள்

**மதுரை, ஏப். 12:** மதுரை மாவட்ட விளையாட்டு அலுவலர் வெளியிட்டுள்ள அறிக்கை: சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் வகையில், 'முதலமைச்சர் மாநில இளைஞர் விருது' ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரை உள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது ரூ.1 லட்சம் ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அதன்படி, 2025ம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர்வரும் ஆகஸ்ட் 15ம் அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் வழங்கப்படவுள்ளது.

இவ்விருது பெறுவதற்கான தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதன்படி 15 முதல் 35 வயது வரையுள்ள ஆண், பெண் என இருபாலரும் விண்ணப்பிக்கலாம். ,இவர்கள் 2024ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி அன்று 15 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். இதனுடன் மற்றும் மார்ச் 31, 2025 அன்று 35 வயதிற்குள் இருத்தல் வேண்டும். கடந்த நிதியாண்டில் (2024-2025) அதாவது 01.04.2024 முதல் 31.03.2025 வரை மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே இந்த விருது பெறுவதற்கான தகுதியாக கருத்தில் கொள்ளப்படும். விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்தபட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் வசிப்பவராக இருப்பதற்கான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருக்க வேண்டும். அத்தொண்டு கண்டறியப்படக்கூடியதாகவும், அளவிடக்கூடியதாகவும் இருக்க வேண்டும். ஒன்றிய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது. விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு விருதுக்காக பரிசீலனை செய்யப்படும். இணையதளம் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள் 03.05.2025 அன்று மாலை 4 மணி ஆகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# மாணவிக்கு மருத்துவ நிதியுதவி



திமுக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம், மதுரை வில்லாபுரம் பகுதியைச் சேர்ந்த மாணவி பிரியதர்ஷினி தனது மருத்துவ செலவிற்கு உதவி கேட்டு கோரிக்கை மனு அளித்திருந்தார். இதையடுத்து மாணவிக்கு இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக ரூ.25 ஆயிரத்திற்கான காசோலையை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ வழங்கினார். உடன் இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தரராஜன், மாவட்ட துணை செயலாளர் மூவேந்திரன் உள்ளிட்டோர்.

### மனைவியை அனுப்ப மறுத்த

# மைத்துனருக்கு கத்திக்குத்து

**பேரையூர், ஏப். 12:** பேரையூர் அருகே அணைக்கரைப்பட்டியை சேர்ந்த ஆசை மகன் ராஜ்குமார் (35). இவர் அதே ஊரைச்சேர்ந்த ஆரோக்கியம் (40) என்பவரின் தங்கையை சில வருடங்களுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இதற்கிடையே ராஜ்குமார் தனது மனைவியுடன் அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளார். அப்போதெல்லாம் அவர் தனது அண்ணன் வீட்டில் செல்வதை வழக்கமாக வைத்துள்ளார். இதேபோல் கடந்த சில நாட்களுக்கு முன்பும் நடந்துள்ளது.

இதையடுத்து நேற்று மதுபோதையில் ஆரோக்கியம் வீட்டிற்கு சென்ற ராஜ்குமாரை மனைவி, குழந்தைகளை தன்னுடன் அனுப்பிவைக்கும்படி கேட்டுள்ளார். மது போதையில் இருப்பதால் காலையில் வரும்படி ஆலோக்கியம் கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ராஜ்குமார் கத்தியை எடுத்து மைத்துனர் ஆரோக்கியத்தை சரமாரியாகக் குத்தியுள்ளார். இதில் படுகாயமடைந்த அவர் விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். இது குறித்து வழக்குப்பதிவு செய்து சாப்டூர் போலீசார், தலைமறைவான ராஜ்குமாரைத் தேடி வருகின்றனர்.

### திருப்பரங்குன்றத்தில்

# கோயில் முன்பாக 'காயர்மேட்' விரிப்பு




திருப்பரங்குன்றம் கோயில் முன்பு பக்தர்களின் வசதிக்காக 'காயர் மேட்' விரிக்கப்பட்டுள்ளது.

## பக்தர்கள் உற்சாக வரவேற்பு

**திருப்பரங்குன்றம், ஏப். 12:** திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோயில் முன்பு தினகரன் செய்தி எதிரொலியாக கோடை வெயிலில் பாதங்களில் பாதிப்பின்றி பக்தர்கள் நடந்து செல்ல 'காயர் மேட்' விரிக்கப்பட்டுள்ளது.

முதல்படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் மதுரை மட்டுமின்றி பல்வேறு ஊர்களில் இருந்து சாமி தரிசனம் செய்ய வருகை தருகின்றனர். இந்த நிலையில் தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால், கோயிலுக்கு செல்லும் முன்பு காலணிகளை வெளியே விட்டு வெறும் காலில் நடந்து செல்லும் பெண்கள், குழந்தைகள், முதியோர் உள்ளிட்டோர் வெப்பத்தின் தாக்கத்தை தாங்கிக்கொள்ள முடியாமல் கடும்சிரமம் அடைந்து வந்தனர்.

இது குறித்து கடந்த மார்ச் 27ம் தேதி தினகரன் நாளிதழில் செய்தி வெளியானது. இதனைத் தொடர்ந்து கோயில் நிர்வாகம் சார்பில் கோயில் முன்பாக பக்தர்களின் வசதிக்காக மூன்று பக்கத்திற்குமாக சேர்த்து சுமார் 50 மீட்டர் நீளத்திற்கு பக்தர்களின் பாதங்களை வெப்பத்தில் இருந்து காப்பாற்றும் வகையில் 'காயர் மேட்' விரித்துள்ளனர். கோயில் நிர்வாகத்தின் இந்த செயலுக்கு பக்தர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

### ரூ.260 கோடி மதிப்பீட்டில்

# தேனி சாலையில் பைபாஸ் திட்டம்

## வீடுகள் இடிக்கும் பணிகளில் வேகம்

**மதுரை, ஏப். 12:** தேனி சாலையில் நடக்கும் பைபாஸ் சாலை திட்டத்தில், வீடுகளை இடிக்கும் பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

ராமேஸ்வரத்தில் இருந்து கொச்சின் வரையிலான தேசிய நெடுஞ்சாலையில் மதுரை - தேனி மார்க்கத்தில் நாகமலை புதுக்கோட்டை துவங்கி முடக்குச்சாலை சந்திப்பு வரை, சாலையை விரிவாக்கம் செய்ய தமிழக நெடுஞ்சாலைத்துறையின் தேசிய நெடுஞ்சாலை பிரிவு முடிவு செய்தது. இதற்காக விராட்டிபத்து, அச்சம்பத்து ஆகிய பகுதிகளுக்குள் நில ஆர்ஜிதம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து, எச்எம்எஸ் காலனி சந்திப்பில் ரூ.53.95 கோடியில் ஒன்றிய அரசு நிதியின் கீழ் மேம்பாலம் கட்டுவதுடன், நான்கு வழிச்சாலையுடன் கூடிய பைபாஸ் சாலை அமைக்கவும் திட்டமிடப்பட்டது.



தேனி சாலையில் பைபாஸ் அமைக்கும் பணிகளுக்காக, விராட்டிபத்து பகுதியில் வீடுகள் இடிக்கப்பட்டன.

இதற்காக, ரூ. 260 கோடி ஒன்றிய அரசின் சாலை மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டு கடந்தாண்டு செப்டம்பரில் பணிகள் துவங்கின. இத்திட்டத்தில் சாலை அமையும் திசையில் தனியாருக்கு சொந்தமான தோப்புகள் மற்றும் தரிசு நிலங்களில் இருந்த 484 மரங்களை அகற்ற மாவட்ட பசுமை கமிட்டியிடம் அனுமதி பெறப்பட்டு, 350க்கும் மேற்பட்ட மரங்கள் அகற்றப்பட்டன. பின்னர் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களை அகற்ற மின்வாரியத்திடமிருந்து அனுமதி பெறுவதில் தாமதம் ஏற்பட்டு வந்தது. இதனால், திட்டம் துவங்கி மூன்று மாதங்கள் கழித்து கடந்தாண்டு டிசம்பரிலிருந்து பல்வேறு கட்டங்களாக வீடுகள் இடிக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

இதன்படி, தேசிய நெடுஞ்சாலை பிரிவின் உதவி கோட்ட பொறியாளர் துரைராஜ், உதவி பொறியாளர் ரங்கராஜன் தலைமையிலான அதிகாரிகள் நேற்று விராட்டிபத்து முதல் பஸ் நிறுத்தத்தில் வீடுகளை இடிக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

இது குறித்து, நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: திட்டப்படி, 3.5 கி.மீ தூர சாலையில் 1.5 கி.மீ தூரத்திற்கு மண் மேவும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதேபோல், கன்னியாகுமரி - வாரணாசி தேசிய நெடுஞ்சாலையை கடக்கும் விதமாக 42 தூண்களுடன் 980 மீட்டர் நீளம், இருபுறமும் தலா 10.5 மீட்டர் அகலத்துடன் உயர்மட்ட பாலம் கட்டும் பணிகள் நடக்கின்றன. இப்பால பணிக்காக முதற்கட்டமாக 5 தூண்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அதேபோல், சாலை பணிகளுக்காக வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் என, 150 கட்டிடங்கள் இடிக்கப்பட வேண்டும். அவற்றில், 5 வீடுகள் இடிக்கப்பட்டிருந்தன. எனினும், விராட்டிபத்து முதல் பஸ் நிறுத்தம் முன்பு அமைய உள்ள பிரதான சாலையின் வளைவு பகுதியை அமைக்க இடையூறாக இருக்கும் வீடுகளை இடிக்கும் பணிகள் நேற்று நடந்தன. மீதமுள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களை இடிக்கும் பணிகள், அடுத்த வாரத்தில் நடைபெறும். இவ்வாறு கூறினர்.

சூரியன் பதிப்பகம் பரபரப்பான விற்பனையில்
பெருமையுடன் வழங்கும்
இரண்டாம் நிலை காவலர் தேர்விற்கான சிறந்த கையேடு!
(இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்பாளர்)




உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!
₹675/-

QRcode-ஐ ஸ்கேன் செய்து Payment செலுத்திவிட்டு, Payment செய்த ஸ்கிரீன் ஷாட்டையும் கொரியர் செய்வதற்கான முகவரி மற்றும் மொபைல் எண்ணையும் சேர்த்து 98402 24816 என்ற WhatsApp நம்பருக்கு அனுப்பி உங்கள் ஆர்டரை உறுதி செய்து கொள்ளவும்.

மணியார்டர் மற்றும் டிமாண்ட் டிராஃப்ட் அனுப்புவர்கள் சூரியன் பதிப்பகம், # 229, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை 4. என்ற முகவரிக்கு அனுப்பவும்.
மேலும் விவரங்களுக்கு...
72990 27361 | 98946 25343 | 74487 28022

**க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**
(முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டிடம், கங்கா ட்ரூனோ, லோஹிகான், புனே, மகாராஷ்டிரா 411014, கிளை அலுவலகம் அலகு: எண் 39, ஜியோன் டவர்ஸ், 3ஆவது தளம், காளவாசல் புறவழிச்சாலை, மதுரை 625016.

**மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு**
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

**பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9-ன் கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.**

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் ஜீ மணி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் அன்லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப்பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12)-ன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13 (2) மற்றும் விதிகள் 8 & 9-ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 29/04/2025 அன்று மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள ஜிஎச்எப்எல்/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com-ஐ பார்வையிடவும்.

| வ. எண் | முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் {A} | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை {B} | சுவாதீனத் தன்மை {C} | சொத்தின் விவரம் {D} | நிர்ணய விலை {E} | முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) {F} | முன்வைப்புத் தொகை செலுத்தும் {G} | ஏல உயர்வுத் தொகை {H} | சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் {I} | ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் {J} | தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் {K} |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | கடன் எண் HF0494H21100298 ராம்கி (கடன்தாரர்) ரதி M (உப கடன்தாரர்) பொன்ராம் M (உப கடன்தாரர்) பிரியா K (உப கடன்தாரர்) | அறிவிப்பு தேதி: 07/02/2024 மொத்த நிலுவை: 07/02/2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.852653- (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து அறுநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) மற்றும் பணம் செலுத்தும் வரையிலான ஆண்டு வட்டி @ 18% உட்பட. | கையக | அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட: சர்வே எண் 2058/6b2, டவுன் வார்டு 7, பழைய கதவு எண் 78, புதிய கதவு எண் 3, காளியம்மன்கோவில் தெரு, உத்தமபாளையம், உத்தமபாளையம் கிராமம், உத்தமபாளையம் பேரூராட்சி, உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். மொத்தப் பரப்பளவு 1343.75 சதுர அடி, அஞ்சல் குறியீடு-625533. **எல்லைகள்: கிழக்கு:** கிழக்கு மேற்காக 6 அடி வழிப்பாதை, **மேற்கு:** குருசாமி நாடார் வீடு, **வடக்கு:** லோகமணி பிரகாஷ் பிரேம்குமார் வீடு மற்றும் காலி நிலம், **தெற்கு:** 10 அடி தெரு. | ரூ. 11,60,000/- (ரூபாய் பதினொரு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) | ரூ. 1,16,000/- (ரூபாய் ஒரு லட்சத்து பதினாறாயிரம் மட்டும்) | 28/04/2025 மாலை 5 மணிக்கு முன்பு | 10,000/- | 22/04/2025 (முற்பகல் 11 முதல் மாலை 4 மணி வரை) | 29/04/2025 (முற்பகல் 11 முதல் பிற்பகல் 2 மணி வரை) | ஏதுமில்லை |
| 4 | கடன் எண் HM0126H18100414 ஒச்சதேவர் நல்லம்மாள் ஒச்சதேவர் கணேஷ்குமார் ஒச்சய்யாதேவர் | அறிவிப்பு தேதி: 06/06/2024 மொத்த நிலுவை: 06/06/2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.546368- (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பத்தாறாயிரத்து முந்நூற்று அறுபத்தெட்டு மட்டும்) மற்றும் பணம் செலுத்தும் வரையிலான ஆண்டு வட்டி @17.50% உட்பட. | கையக | அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட: TS எண்: 115, பிளாக் எண்: 19, வார்டு எண்: 8, நகராட்சி வார்டு, ராசு செட்டியார் தெரு, கருக்கட்டான்பட்டி, முதன்மைச் சாலை, உசிலம்பட்டி (தாலுகா), மதுரை (மாவட்டம்). மொத்தப் பரப்பளவு 860 சதுர அடி, மதுரை மாநகரம், பேருந்து நிலையம், தமிழ்நாடு 625532. **எல்லைகள்: கிழக்கு:** மறைந்த வெள்ளைத்தாய் சொத்து, **மேற்கு:** கருப்பய்யா அவர்களின் வீடு மற்றும் 5 அடி வழிப்பாதை, **வடக்கு:** அங்கம்மாள் அவர்களின் நிலம், **தெற்கு:** ஈஸ்வரி அவர்களின் குடியிருப்பு வீடு. | ரூ. 13,27,550/- (ரூபாய் பதின்மூன்று லட்சத்து இருபத்தேழாயிரத்து ஐந்நூற்று ஐம்பது மட்டும்) | ரூ. 1,32,755/- (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்தைந்து மட்டும்) | 28/04/2025 மாலை 5 மணிக்கு முன்பு | 10,000/- | 11/03/2025 (முற்பகல் 11 முதல் மாலை 4 மணி வரை) | 29/04/2025 (முற்பகல் 11 முதல் பிற்பகல் 2 மணி வரை) | ஏதுமில்லை |

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/ கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச் சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்துவரி, மின்சாரம்/ வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிட்., முகவரி: மனை எண்-68, 3ஆவது தளம், குர்கான், ஹரியானா-122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்புஎண். 9948182222 மூலமாகவோ தொடர்புகொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக "க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிட்." வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்-000651000460 மற்றும் IFSC Code- ICIC0000006, 20, R.N.முகர்ஜி சாலை, கொல்கத்தா-700001 என்ற கிளையில் செலுத்தத்தக்க விதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது அட்டவணை வங்கியிலோ 28/04/2025 தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் பெயரை முன்னதாகவே பதிவுசெய்து கட்டணமில்லா மின்-ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூலப் பிரதியை எண் 1510, 2ஆவது தளம், ஸ்ரீ வளாகம், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 9597907666 மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com-ல் தொடர்பு கொள்ள வேண்டும்.
மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.
கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டம்-2002-ன் விதி 8(6)-ன் கீழ் கடன்தாரர்/ உப கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

**தேதி: 12.04.2025, இடம்: தமிழ்நாடு** — **ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)**

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...
தினகரன்
8904156777
9.30 AM - 6.00 PM